திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாயூரம் தொகுதியில் உள்ள மணல்மேட்டிலுள்ள அரசினர் மருந்தகத்திற்கு மின்சார வசதிகள் செய்யப்பட வேண்டுமென்று பல ஆண்டுகளாக தொடர்புடைய அதிகாரிகளிடத்திலே கோரிக்கைகள் விடுத்தும் நிறைவேற்றப்படாத நிலைமை இருக்கிறது. குறைந்த அளவுக்குத் தான் 400 ரூபாய் 500 ரூபாய் அளவிலேதான் செலவாகின்ற நிலை இருப்பதால் இந்தக் காரியத்தை உடனடியாகச் செய்வதற்கு அரசு ஆணை யிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மின்சார வசதி அங்கே வழங்கப்பட வேண்டுமென்று சுகாதார இலாகா இயக்குநர் பொறியியல் துறை இயக்கு நருக்கு தெளிவாக அறிவித்திருக்கிறார்கள். இந்த வேலை இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும் என்று அறியப்படுகிறது.

பிச்சைக்காரர் விடுதிகள்

*** 509 வினா.—திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் தற்போது பிச்சைக்காரர் விடுதிகள் எங்கெங்கு அமைக்கப் பட்டுள்ளன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தமிழகத்தில் கீழ்க்கண்ட இடங் களில் பிச்சைக்காரர் விடுதிகள் இயங்கி வருகின்றன :

(1) அரசுக்காப்பு முகாம், மேலப்பாக்கம் (சென்னை அருகில்).

(2) அரசுக்காப்பு முகாம், காஞ்சீபுரம்.

(3) பிச்சைக்காரர் விடுதி, கிருஷ்ணாம்பேட்டை (மாநகராட்சியால் பேணப்பட்டு வருகிறது).

(4) பிச்சைக்காரர் விடுதி, செங்கல்பட்டு.

(5) பிச்சைக்காரர் விடுதி, விருதுநகர்.

(6) பிச்சைக்காரர் விடுதி, திருச்சிராப்பள்ளி.

(7) பிச்சைக்காரர் விடுதி, கோயம்புத்தூர்.

(8) பிச்சைக்காரர் விடுதி, மதுரை.

(9) பிச்சைக்காரர் விடுதி, நாகர்கோவில்.

(10) பிச்சைக்காரர் விடுதி, சீர்காழி.

(11) காப்பு முகாம், சிதம்பரம்.

(12) தயாசதன், ஓட்டேரி (தனியார் நிறுவனம்).

1972 மார்ச் 15]

திரு. ஏ. சுப்பிரமணியம்: துணைத் தலைவர் அவர்களே, இந்த பிச்சைக் காரர் மறுவாழ்வு நிதி திரட்டப்பட்டதே அதிலே எவ்வளவு தொகை வசூலாகி யிருக்கிறது? எந்த அளவுக்கு செலவழிக்கப்பட்டிருக்கிறது? மீதத் தொகை செலவழிக்கப்படுவதற்குப் பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டு உள்ளதா? அப்படியானால் என்னவென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இதுவரையிலும் வசூலான தொகை கிட்டதட்ட 1 கோடியே 3 லட்சத்து 72 ஆயிரத்து 129 ரூபாய் 58 காசுகள், இதிலே செலவான தொகைபற்றித் தனிக்குறிப்பு எதுவும் இல்லை. தனிக்கேள்விபோட்டால் எவ்வளவு செலவழிக்கப்பட்டது என்பதைக் குறிப் பிட்டுச் சொல்லலாம்.

திரு. ஆர் பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, நாகர் கோவிலில் ஒரு பிச்சைக்காரர் விடுதி முனிசிபாலிட்டியால் நடத்தப்பட்டு வருகிறது. இப் பொழுது நாகர்கோவில் நகரத்திலே பிச்சைக்காரர் தொல்லை அதிகமாக இருக் கிறது. அவர்களையெல்லாம் அந்த விடுதியிலே இருக்கச்செய்து உணவு அல்லது வேலை கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: முதலிலே தொழுநோய் பிடித்துள்ளவர்களைத்தான் அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்டு விடுதிகளைக் கட்டி அங்கே உதவி செய்யப்பட்டு வருகிறது. மற்ற பிச்சைக்காரர்கள் பற்றி பிறகுதான் கவனிக்கவேண்டும். மேலும் பிச்சைகாரர்கள் விடுதிகளைக் கட்டி அவர்களுக்கு உதவிசெய்யக்கூடிய பணியை சில மாநகராட்சிகளும், நகராட்சி களும் செய்துவருகின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி: பிச்சைக்காரர் விடுதி என்று குறிப்பிடு வதற்கே கஷ்டமாக இருக்கிறது, எனவே, வேறு ஏதாவது பெயர் வைத்து அழைக்க அரசாங்கம் முடிவுசெய்யுமா? ஆறுயிரம் தொழுநோய்க்காரர்கள் இருக்கிறார்களே, அவர்களிலே எத்தனைபேர்களுக்கு இந்த விடுதிகள் மூலம் உதவி செய்யப்பட்டுவருகிறது, மீதம் உள்ளவர்களுக்கு என்ன ஏற்பாடுகளை செய்திருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பிச்சைக்காரர் பிரச்னையென்பது ஏதோ இன்றைக்கு ஆரம்பித்து நாளைக்கே முடித்துவிடவேண்டுமென்ற சூளுரையோடு முடித்துவிடக்கூடியதல்ல. நான்காண்டுக் காலம் ஐந்தாண்டுக் காலம் என்று காலக் கெடு வைத்து அரசு இந்த முயற்சிகளை மேற்கொண்டிருக் கிறது. ஏற்கனவே மூன்று இடங்களிலே விடுதிகள் கட்டப்பட்டிருக்கின்றன. இன்னும் பல விடுதிகள் கட்டப்பட இருக்கின்றன.

[1972 மார்ச் 15

திரு. தொ. ப. சீனிவாசன் : பிச்சைக்காரர் விடுதி ஒன்றை அரசு வட ஆற்காடு மாவட்டத்தில் கட்டுவதற்கு இடம் பார்த்ததாகவும் அறியப்படுகிறது. எனவே, அதை பரிசீலித்து அங்கேயே அந்த விடுதியைக் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : வட ஆற்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலை-வேலூர் சாலையில் திருவண்ணாமலையிலிருந்து 12 மைல் தூரத்தி லுள்ள இடத்தைத் தேர்தெடுத்திருக்கிறது. அந்த இடத்திலே கட்டவேண்டு மென்று முடிவுசெய்யப்பட்டிருக்கிறது. உரிய வகையிலே தொழுநோய்ப் பிச்சைக் காரர்களை வைப்பதற்கு தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி வசூலித் ததற்குப் பின்னாலே மூன்று இடங்களிலே தொடங்கியிருப்பதாகச் சொன் னார்கள். சில இடங்களில் இந்த ஆண்டு தொடங்கப்படும் என்று சொன்னார்கள் எந்த எந்த இடங்களில் தொடங்கப்பட இருக்கிறது? ஏற்கனவே அமைச்சர் அவர்கள் 12 இடங்களில் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த இடங்களுக்கு இந்த நிதியிலிருந்துதான் பணம் வழங்கப்படுகிறதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : உளுந்தூர்பேட்டை, பரனூர் என்ற இடங்களில் விடுதிகள் கட்டப்பட்டு துவக்கப்பட்டு இருக்கிறது. பர்கூரில் ஒரு விடுதி கட்டப்பட்டுள்ளது. சட்டசபைக் கூட்டத்திற்குப் பிறகு அதைத் துவக்கிவைக்க இருக்கிறோம். வட ஆற்காடு மாவட்டத்திலே திருவண்ணாமலை—வேலூர் சாலையிலேயும் திருச்சி மாவட்டத்திலே தஞ்சைக்கும் புதுக் கோட்டைக்கு இடையிலே உள்ள பாதையிலே நான்கு மைல் தூரத்தில் உள்ள அண்டகுளம் என்ற இடத்திற்கு மேற்குப் பகுதியிலே கட்டடம் கட்டுவதற்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இவைகள் கட்டி முடிக்கப்பட வேண்டிய ஏற் பாடுகள் நடந்துவருகின்றன.

தொழுநோய் இல்லாத பிச்சைக்காரர்களுக்கு உதவி செய்வதைப் பொருத்த வரையில் தயாசாதன் என்ற நிலையில் தனியார் நடத்துகிறார்கள். இரண்டு போலீஸ் துறையில் நிர்வாகத்தினாலே அரசாங்கத்தாலே நடத்தப்பட்டு வரு கின்றன. ஏனையவற்றை மாநகராட்சிகளும் நகராட்சிகளும்தான் நடத்தி வருகிறார்கள். எஞ்சிய வருவாய் உள்ள மாநகராட்சிகள்தான் நடத்தி வருகிறார்கள். சிதம்பரத்திலே உள்ளதை இப்பொழுது அரசு எடுத்து நடத்தப் போகிறது. ஆகவே தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு உதவி செய்வதற்குத் தான் முழுத் திட்டம் போட்டிருக்கிறோம். மற்றப் பிச்சைக்காரர்களுக்கான திட்டம் அரசு ஏற்று நடத்தவில்லை.